DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 389/2025

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ஜீவராஜன் |
| Father / Husband Name | ரமேஷ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்குழி கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். சாட்சி பால்ராஜ் என்பவரை தெரியும். அவரும் நானும் ஒன்றாக வேலை செய்து வந்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா6 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 17.04.2025 ம் தேதி மாலை 7.30 மணியளவில் கருங்குழி ராகவேந்திரா கோவிலுக்கு எதிரே உள்ள பெட்ரோல் பங்கிற்கு சென்ற இருசக்கர வாகனத்தை பின்னால் வந்த லாரி மோதி விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக போலிசார் மறுநாள் காலை சம்பவயிடத்திற்கு வந்து விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நானும் பால்ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டோம். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். போலிசார் எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் 17.04.2025 அன்று 08.30 மணியளவில் விசாரணை செய்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கிய காவல் துறை அதிகாரியின் பெயர் மற்றும் அவரது பதவி தெரியுமா என்றால் மதுராந்தகம் காவல் நிலையம் என்று தெரியும் மற்ற எதுவும் தெரியாது. விபத்து நடந்தபோது நான் அங்கு தான் இருந்தேன்.